தருமபுர ஆதீனம் வெளியீடு 33

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன

ஸ்தாபகர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளின்

வரலாறும்,

சில பாசுரங்களும்.

1941.

மிராசுதார் க்ஷேம அச்சுக்கூடம், மாயவரம்.

காப்பி 2000.

உ

பிரசுரம்

பொன்னாட்டினுமுயர் நன்னாடாய இத்தென்றமிழ்நாட்டின்கண் சைவ ஆதீனங்களுள் பெருஞ்சிறப்பினதாய் விளங்கும் இத்திருக்கயிலாயபரம்பரை தருமபுர ஆதீனத்தில் இப்பொழுது 24—வது பரமாசாரியராய் எழுந்தருளி விளங்கும் ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த மகாசன்னிதானம் அவர்கள் சைவசமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் புத்துயிர் அளித்து அரும்பணிகள் பல ஆற்றிவருகின்றார்கள் என்பது யாவருமறிந்ததே. இவ்வாதீனத்து ஆதிகுருமூர்த்தியாகிய ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் இயற்றிய சொக்கநாத வெண்பா, சொக்கநாதக் கலித்துறை, பண்டாரக்கலித்துறை, சிவபோகசாரம், முத்திநிச்சயம், முதலான அனுபவ நூல்களை யாவரும் கற்றுணர்ந்து உய்யவேண்டுமெனத் திருவுளங்கொண்டு இதற்குமுன் இருமுறை அச்சியற்றி இலவசமாய் வழங்கப்பட்டுவருகிறதெனினும், இன்னமும் எளிதில் யாவரும் பெற்று கற்றுணர்ந்து, உய்யவேண்டுமென்று இந்தநூல்களிலும் உள்ளனவாய அரும்பொருள்தனை தெளியஉணர்த்தும் செய்யுட்கள் சிலவற்றைத் தொகுத்து அவர்கள் வரலாற்றைச் சுருக்கிச் சேர்த்து அச்சியற்றியிருக்கிறது.

குருபாதம்.

குருஞானசம்பந்தர் வரலாறு.

குருபரம்பரை வாழ்த்து.

கயிலாய பரம்பரையிற் சிவஞான சித்திநெறி
காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞானபானு வாகித்
துயிலாரும் பொழிற்றருமை வாழ்ஞான சம்பந்தக்
குரவன் மேலாஞ்
சயிலாதி மரபுடையோன்றிருமரபு நீடூழி தழைக
மாதோ.

பாண்டியநாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் கார்காத்தவேளாள குலத்தில், சிவநேசச் செல்வரான சுப்பிரமணியபிள்ளை என்பாரின் தவப்பயனாய், ஸ்ரீ மீனாக்ஷியம்மையாரிடத்தில் **ஞானசம்பந்தர்** அவதரித்தார். அவர் வளர்மதி போல் வளர்ந்து, தென்மொழி வடமொழி முதலியவற்றில் பயிற்சிபெற்று வருங்கால் ஓர் நாள் தாயும் தந்தையும் தனயனுடன் மதுரை

ஸ்ரீசோமசுந்தர மூர்த்தியையும் ஸ்ரீமீனாக்ஷியம்மையையும் தரிசிக்கச் சென்றார்கள். அங்குச் சிலநாள் தங்கி சுவாமி தரிசனம் செய்துவிட்டு திரும்பவூர்வரப் புறப்படவே, ஸ்ரீசோமசுந்தரக் கடவுள்பால் ஏற்பட்ட பக்தி மேலீட்டால், ஞானசம்பந்தர் அதற்குடன்படாமல் அங்கேயே தங்கிவிட்டார். அப்போது ஸ்ரீசோமசுந்தரக்கடவுளின்பேரில் 'சொக்கநாதவெண்பா' என்று ஒரு பாமாலைபாடி அவரருள்பெற்று ஆலயவழிபாட்டில் ஈடுபட்டிருந்தார். பொற்றாமரைக்கரையில் சிவனடியார்கள் பலர் சிவலிங்கபூஜை செய்திருத்தலைக்கண்டார். தானும் அவ்வாறே செய்யவிழைந்து, சோமசுந்தரக் கடவுளைப் பிரார்த்திக்க, சிவபெருமான் அவர் கனவிற்றோன்றி அருள்பாலித்தார். அதன்படி, ஞானசம்பந்தர் மறுநாட்காலையில் பொற்றாமரைத்தீர்த்தத்தில் மூழ்கிப் பார்க்குங்கால், தம் கையில் எழுந்தருளிய ஸ்ரீசொக்கலிங்கத்தை எடுத்துப்பூஜித்து, சன்னதியில் வந்து தரிசித்துத்தோத்தரித்து வணங்கினார். தன் வேண்டுதலுக்கிணங்க எழுந்தருளிய லிங்கத்தைப் பூஜிக்க, ஞானோபதேசம் செய்யும் சிவாசாரி

யார் ஒருவரை அநுக்கிரகிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தார். அவர் கனவில் [illegible]றயும் ஈசன் காக்ஷியளித்து திருவாரூரில் உபதேச பரம்பரையில் தோன்றியிருக்கும் ஞானப்பிர காசரிடம் சென்று உபதேசம் பெற்றுச் சிவ பூஜை செய்துவரக்கட்டளை யிட்டருளினார்; இதேபோல் திருவாரூரில் ஞானப்பிரகாசர் கனவிலும் தோன்றி ஞானசம்பந்தர் அவரைத் தேடிவரும் செய்தியை உணர்த்தி மறைந்தார்.

ஞானசம்பந்தர் மதுரையை விட்டுப்புறப் பட்டு, பல க்ஷேத்திரங்களையும் தரிசித்துக் கொண்டு, திருவாரூர் வந்தடைந்து, தியாகேசர் ஆலயத்தில் சித்தீச்வரத்தில் தக்ஷிணாமூர்த்தி சன்னதியில் ஞானப்பிரகாசர் எழுந்தருளி யிருப்பதைக்கண்டு, அவரைப்பணிந்து, ஞானோபதேசம்பெற்றுச் சிவலிங்கபூஜை எழுந் தருளுவிக்கப்பெற்றார். அவர் ஸ்ரீ சொக்க லிங்கத்தின்மீது 'சொக்கநாதக்கலித்துறை' என் னும் பாமாலை பாடித்துதித்துப் பூஜை செய்து கொண்டு, குருபணிவிடை புரிந்துவந்தார்.

ஞானப்பிரகாசர் பிரதிதினமும் தன் சிடர்களுடன் கோவிலுக்குப்போய் அர்த்த ஜாம தரிசனம் செய்துகொண்டு வருவது வழக்கம். ஓர் நாள் அவர் அவ்விதம் செய்து விட்டுத் திரும்பி வரும சமயம் கைவிளக்குக் காரன் உறங்கிவிட்டான். அதுதெரிந்த ஞான சம்பந்தர், அப்பணிவிடையைத் தாமேஏற்றுக் குருவுடன் மடம் சேர்ந்தார். மடத்திற்புகும் பொழுது 'நிற்க' என குரு இவரைப்பணித்துச் சென்றார் இவரும் அவ்வாறே அந்த இடத்தி லேயே பொழுதுவிடிந்தும் கைவிளக்குடன் நின்றிருந்தார். விடியற்காலே வெளிவந்த குரு பத்தினி, ஞானசம்பந்தர் நிற்கும் நிலையையும், இரவில் பெருமழை பெய்திருந்தும் அவரைச் சுற்றி ஒரு கஜதூரம்வரை ஒரு துளிமழைகூட விழாதிருந்ததோடு பக்கத்தில் பெய்த மழை ஜலம் இவரை நெருங்காமலிருப்பதையும் கண்டு அதிசயித்து உட்சென்று ஞானப்பிர காசருக்கு உணர்த்தினர்; அவரும் வியந்தோடி வந்து ஞானசம்பந்தரைக்கண்டு அவர் நிலையை உணர்ந்தார். அவர் தாமும் வணங்கும் குரு ராயராகிவிட்டதாக மகிழ்ந்துகூறி அவரிச்சை

யின்வழி செல்லலாமென்றும் உத்திரவிட்டார். அதைக்கேட்ட ஞானசம்பந்தர் தமக்கென ஒரு சுதந்திரமில்லாததால் குரு உத்திர வொன்றையே தாம் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்தார். குருவும் அது கேட்டு மகிழ்ந்து "மாயூரத்திற்குக் கீழ்பால் எமதருமனால் ஸ்தா பித்துப் பூஜிக்கப்பெற்று அகத்திய முனி முதலிய மகான்களால் பூஜித்து வணங்கப் பெற்ற ஸ்ரீதருமபுரீஸ்வரர் வீற்றிருக்கும் வில் வாரணியமாகிய தருமபுரத்திற்குச் சென்று உமது பக்கல் வந்தடைந்த பக்குவிகளுக்கு ஞானோபதேசஞ்செய்து, சைவசமய ஸ்தா பனஞ்செய்து, சைவ சித்தாந்த பீடாதிபதி யாய் அமர்ந்து வாழக்கடவீர்" எனக்கட்டளை யிட்டருளினர்.

அதன்படி தருமபுரம் வந்தடைந்து குரு ராயதேசிகமணியாய், மெய்கண்ட சந்தான தேசிகபீடாதிபதியாய் எழுந்தருளியிருந்து, சிவபோகசாரம், முத்திநிச்சயம், பேராநந்த சித்தியார் முதலிய பலஞானசாத்திரங்களையும், பல தோத்திரங்களையும் அருளிச்செய்தனர்.

அவ்வாறிருக்கையில் தருமபுரத்திலுள்ள ஸ்ரீ தருமபுரீஸ்வரருக்குப் பூசனை முதலியன நடத்திவந்த அகத்திய முனிவரின் சீடர்கள், இக்குருமூர்த்தியிடம் தங்கள் ஆஸ்ரமங்கள் கோவில் முதலியவைகளை ஒப்புவித்துப் பரிபாலித்து வரும்படி சொல்லித் தங்கள் தங்கள் ஸ்தானங்களுக்குச் சென்றார்கள். இவ்வாறு கச் சிவாலயத்தையும் திருக்கூட்டத்தையும் பாதுகாத்துவரும் நாளில், ஞானசம்பந்தர் தமக்குப் பரிபூரணநிலை வந்தடையும் சமயம் உணர்ந்து சிவாலயத்துக்கு மேற்கே கோவிலொன்று கட்டிச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, தமது சீடர்களில் அதிதீவிர பக்குவராகிய ஆனந்தபரவசருக்கு ஞானோபதேசம் செய்து, தமது பீடாதிபத்யத்தையும் ஸ்ரீசொக்கலிங்கத்தையும் கொடுத்தருளி, தம்மைப்போல் எல்லாவற்றையும் பரிபாலித்து வரக்கட்டளையிட்டுச் சமாதி கூடியருளினர். அதிதீவிரபக்குவரானபடியால் ஆனந்தபரவசரும் தமது ஆசாரியாரின் சமாதியின் மேற்புறத்தில் உடனே சமாதி கூடிவிட்டார்கள். திருக்கூட்டத்தினர்கள் தங்களுக்குக் குரு

நாதன் இல்லாது போன குறைபற்றி ஞான சம்பந்தர் சன்னதியில் சென்று தெரிவித்துக் கொண்டார்கள். அந்த வேண்டுதலுக்கிரங்கி, ஞானசம்பந்தர் சமாதியினின்று மீண்டும் எழுந்தருளிவந்து தம்சீடர்களில் ஒருவராகிய சச்சிதானந்தர் என்பவருக்கு அபிஷேகம் செய்து, தமது பீடத்தமர்த்தி ஸ்ரீசொக்க லிங்கத்தையும் கொடுத்தருளி, இத்திருமரபு நீடூழி தழைந்து வரும்படி நடத்திவரப் பணித்து, மறுமுறையும் சமாதிகூடித் தத்சாரூப சித்தியினை எய்தியருளினார்கள்.

ஆய்வார் பதிபசு பாசத்தி னுண்மையை
யாய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி
கேள்வியல்ல
லோய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன்
றிரண்டுமறத்
தோய்வார் சமயையுண் ஞானப்ர காசன்மெய்த்
தொண்டர்களே.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

சொக்கநாதவெண்பா:

ஆடரவஞ் சூழ்மதுரை யம்மானே யன்பருடன்
கூடவிளை யாடிவருங் கோமானே—நீடுபுகழ்
மென்மேலு மென்றனக்கு மேவியிடப் பொல்லாத
வென்மேல் வினைகெடுப்பா யே. 1

எல்லாமும் வல்லசித்த ரென்றக்கா லென்னுடைய
பொல்லாக் கருத்தகற்றப் போகாதோ—வல்லாடும்
பொங்கார வேணிப் புனிதா மதுரைநகர்ச்
சங்கரா சொக்கநா தா. 2

இறந்தும் பிறந்து மிளைத்தே னினியான்
மறந்தும் பிறவா வரந்தா—சிறந்தபுகழ்
ஞாலவா யாமுடிக்கு நாட்டுரு ளாமணியா
மாலவாய்ச் சொக்கநா தா. 3

சித்த மெழுந்தருளி நின்மலனே யென்றனக்குப்
புத்திமிக மிகவும் போதித்துச்—சித்தமயல்
போக்குவா யின்பசுக பூரணத்தி ரண்டறவே
யாக்குவாய் சொக்கநா தா. 4

உணர்த்தி லுணர்வே னுணர்த்தாயே னாயேன் [னுட்
கணத்து முணரும்வகை காணே—னுணர்த்தியென்
பூண்டமல மாயைகன்மம் போக்கிச் சிவானந்தத்
தாண்டருள்வை சொக்கநா தா. 5

கெடுங்காலம் வந்தாற் கெடுப்பை கதியில்
விடுங்காலம் வந்தால் விடுவை—கொடுந்தவங்கள்
பண்ணிடினும் பாவம் பயிற்றிடினு மாரேனு
மண்ணாலே சொக்கநா தா. 6

கால வசமோ கடியேன் வினைவசமோ
ஞாலவச மோவருளை நாடியே—கோலமறச்
சிற்பரா னந்தவெள்ளஞ் சேர்ந்தறிந்துஞ் சேர்கிலேன்
றற்பரா சொக்கநா தா. 7

எக்கால மிக்காய மிற்றிடுமோ வென்வினைக
ளெக்கால மும்மலங்க ளிற்றிடுமோ—வெக்கால
மானந்த சாகரத்தி லாடிடுமோ வென்னுளந்தா
னானந்தா சொக்கநா தா. 8

ஆலந் தரித்தலிங்க மாலவாய்ச் சொக்கலிங்க
மூலமா யெங்கு முளைத்தலிங்கம்—பாலொளியா
மத்தனே கூடன் மதுரா புரியுமையா
ளத்தனே யாலவா யா. 9

தன்னந் தனியே தமியேன் முறையிட்டா
லின்னந் திருச்செவியி லேறாதோ—மன்னவனே [தந்
தென்மதுரை மேவித் திருந்தியசெங் கோல்செலுத்
தன்மதுரை நீயலவோ தான். 10

பேரன்ப னல்லன் பிழைசெய்யான் றானல்லன்
ஓரன்பு மில்லா வுலுத்தனேன்—பேரன்பு [விலே
காட்டியெனைக் காட்டியுனைக் காட்டியின்பத் தொட்டி
யாட்டிவளர் சொக்கநா தா. 11

கருணை நிதியே கடவுளே யன்பர்
பொருளான பேரின்பப் பொற்பே—யொருநாளு
நீங்கா தெனதறிவி னின்றசுகா னந்தமே
யாங்காணீ சொக்கநா தா. 12

ஆறுதலை யில்லை யடியேனுக் கன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலரில்லை—வேறெனக்குத்
திக்காரு மில்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேநின் றருளே துணை. 13

உனக்குப் பணிசெய்ய வுன்றனையெந் நாளு
நினைக்க வரமெனக்கு நீதா—மனக்கவலை
நீக்கின்ற தென்மதுரை நின்மலனே யெவ்வுலகு
மாக்கின்ற சொக்கநா தா. 14

சொக்கநாதக்கலித்துறை

கண்ணுக் கினிய பொருளாகி யேயென்
 காத்தில்வந்தாய்
விண்ணும் பரவிடு மற்புத மேயென்ன
 விஞ்சையிதான்
மண்ணும் புகழ்ந்திட வென்னையும்
 பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா
 புரிச்சொக்க நாயகனே. 1

அறிவைத் திருப்பிநின்
 பாதார விந்த மடையவல்ல
நெறியைக் கொடுத்து
 நிறுத்தினை யேநின்ம லாவினியென்
பொறியைத் தவிர்த்துநின்
 ஞனந்த சாகர பூரணத்தைப்
பிறிவற் றிருக்கவைப் பாயெனை
 யாண்டருள் பிஞ்ஞகனே. 2

பண்டாரக்கலித்துறை என்னும் ஞானப்பிரகாச மாலை.

திருவார் கமலையுண் ஞானப்ர காசன்
   றிருவடிக்கீழ்
வருவா ரவர்வழி வாரான் சமனு ;
   மலரயனுங்
கருவா யிடுவதற் கெண்ணுனெ் நாளுங்
   கருத்தினினீ
வெருவாய் சுகத்தினில் வாழ்வாய் பரானந்த
   மேவிடுமே. 1

கனக்கும் பொதிக்கு மெருதுக்குந் தன்னிச்சை
   கண்டதுண்டோ
வெனக்கு முடற்கு மெனதிச்சை யோவிணங்
   சார்புரத்தைச்
சினக்குங் கமலையுண் ஞானப்ர காச
   சிதம்பரவின்
றனக்கிச்சை யெப்படி யப்படி யாக
   வுரைத்தருளே. 2

வரந்தரு பாதமென் சென்னியிற் றேய்ந்திட
வைத்தெடுத்தான்
பரந்திரு கண்ணினைத் தன்னினிற் காட்சி
பதித்து வைத்தா
னுரந்தனில் வைப்பதென் முன்னின்ப
சாகரத் துள்ளழுத்திப்
புரந்தனன் கூடலில் வாழ்ஞான
சம்பந்த போதகனே. 3

சிவபோகசாரம்

காண்பதும்பொய் கேட்பதும்பொய்
காரியம்போ லேயிதமாய்ப்
பூண்பதும்பொ யெவ்விடத்தும்
போகமும்பொய்—மாண்பாகத்
தோற்றியின்ப வெள்ளமாய்த்
துன்னியென்னுட் சம்பந்தன்
வீற்றிருப்ப தொன்றுமே மெய். 1

ஒருகோடி யாகமங்க ளெல்லா முணர்ந்தும்
பெருகுதவஞ் சித்தியெல்லாம் பெற்றுங்-குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச்
சித்தசல னம்மாங் தினம். 2

என்னை யறிவென்று னென்னறிவி லானந்தந்
தன்னைச் சிவமென்றான் சந்ததமு—மென்னையுன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்று னிம்மூன்று
மாராய்ந் தவர்முத்த ராம். 3

உள்ளங் கரைய வுடல்சரைய வானந்த
வெள்ளங் கரைபுரண்டு மேலாகக்—கள்ளமலம்
பொய்யாக வென்னுட் புகுந்தவா றென்கொலோ
வையா தியாகவினோ தா. 4

ஏதேது செய்தாலு மேதேது சொன்னாலு
மேதேது சிந்தித் திருந்தாலு—மாதேவா
நின்செயலே யென்று நினதருளா லேயுணரி
லென்செயலே காண்கிலே னே. 5

அவரவருக் குள்ளபடி யீசனரு ளாலே
யவரவரைக் கொண்டியற்று மானு—லவ்வவரை
நல்லார்பொல் லாரென்று நாடுவதென் னெஞ்சமே
யெல்லாஞ் சிவஞ்செயலென் றெண். 6

ஏதேது செய்திடினு மேதேது பேசிடினு
மேதேது சிந்தித் திருந்திடினு—மாதேவன்
காட்டிடுவ தானவருட் கண்ணைவிட்டு நீங்காது
நாட்ட மதுவாய் நட. 7

எவ்வுயிருங் காக்கவோ ரீசனுண்டோ வில்லையோ
வவ்வுயிரி னாமொருவ ரல்லவோ—வௌவிப்
பொருகுவது நெஞ்சே புழுங்குவதும் வேண்டாம்
வருகுவதுந் தானே வரும். 8

மூப்பதுஞ்சென் றல்விடியு முப்பதுஞ்சென்றவிருளு
மப்படியே யேது மறிநெஞ்சே— யெப்பொழுது
மாங்கால மெவ்வினையு மாகு மதுதொலைந்து
போங்கால மெவ்வினையும் போம். 9

தாம்பெரிய ரென்னுமதை நாடா தடக்குமவர்
தாம்பெரிய ரென்றுமறை சாற்றியிடு—நாம்பெரிய
ரென்பார் சிறிய ரிவரலா லிவ்வுலகிற்
றுன்பார் சுமப்பார்கள் சொல். 10

[ம்பி
என்னதன்று நின்செயலே யென்றறிந்தால் யான்விரு
என்னவென்று வாய்திறப்பே னீசனே-யின்னமின்ன
மெப்படியோ நாயேனை யீடேற்ற வேண்டுமுனக்
கப்படியே செய்தருளு வாய். 11

அன்றே யநாதி யமைத்தபடி யல்லாதொன்
றின்றே புதிதா யியையுமோ—வென்றுஞ்
சலியா தியற்றுவான் றன்னையே நோக்கி
மெலியா திருந்து விடு. 12

சும்மா தனுவருமோ சும்மா பிணிவருமோ
சும்மா வருமோ சுகதுக்க—நம்மான்முன்
செய்தவினைக் கீடாச் சிவனருள்செய் விப்பதென்று
லெய்தவினை நாடி யிரு. 13

எத்தனைதான் கற்றாலு மெத்தனைதான் கேட்டாலு
மெத்தனைசா தித்தாலு மின்புரு—சித்தமே
மெய்யாகத் தோன்றி விடுமுலக வாழ்வனைத்தும்
பொய்யாகத் தோன்றாத போது. 14

அநித்தியத்தை நித்தியமென் றுதரிக்கும் பொல்லா
மனித்தருடன் கூடி மருவார்—தனித்திருந்து
மோனந்த மாஞ்சிவத்தின் மூழ்கி மலத்தையறுத்
தானந்த மாயமுந்து வார். 15

தனையறியா ரீசன் றனையறியார் பாச
வினையறியா ரானந்த மேவார்—தனையறியுஞ்
சிட்டர்தமக் கில்லாத தீங்குரைப்பர் பொல்லாத
துட்டர்தமக் குள்ள தொழில். 16

கற்கவிடர்ப் பட்டுமிகக் கற்றவெல்லாங் கற்றவர்பாற்
றற்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ—நற்கருணை
வெள்ள மடங்கும் விரிசடையார்க் காளாகி
யுள்ள மடங்கவல்ல வோ. 17

ஐந்தறிவாற் கண்டாலு மாரேது சொன்னாலு
மெந்த விருப்புவெறுப் பேய்ந்தாலுஞ்—சிந்தையே
பார விசாரத்தைப் பண்ணாதே யேதோன்றுந்
தீர விசாரித்துச் செய். 18

பாபாக்க வேண்டாம் பலகாலுஞ் சொன்னேன்
வாவாக்கண் டாராய் மனமே—யொருவருக்குந்
தீங்கு நினையாதே செய்ந்நன்றி குன்றாதே
யேங்கி யிளையா திரு. 19

ஆசையறாய் பாசம்விடா யானசிவ பூசைபண்ணாய்
நேசமுட னைந்தெழுத்தை நீநினையாய்—சீசீ
சினமே தவிராய் திருமுறைக ளோதாய்
மனமே யுனக்கென்ன வாய். 20

அவரவர் வினைவழி யவரவர் வந்தன
ரவரவர் வினைவழி யவரவ ரனுபவ
மெவரெவர்க் குதவின ரெவரெவர்க் குதவிலர்
தவரவர் வினைவது தமையுணர் வதுவே. 21

முத்தி நிச்சயம்

சந்தான நற்குரவர் தக்கோர் பிறர்சமயம்
நந்தாது தோற்றுவித்த நற்குரவர்—முந்தவே
எந்தமுத்தி சித்தாந்த மென்றார்கள் சைவத்தில்
அந்தமுத்தி நிச்சயிப்பேம் யாம். 1

உள்ள மலநீங்கி யோங்கு சிவானந்த
வெள்ளந் திளைத்ததுவாய் மேவுதலே—கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்திற்
சித்தாந்த முத்தியெனத் தேறு. 2

வாழ்த்துப்பா.

கதிவாழ்க வேதநல் லாகமம்
வாழ்கநற் கண்மணியுன்
பதிவாழ்க சைவந் திருநீறுங்
கண்டியும் வாழ்கவருட்
குருவாகும் நின்றன் றிருக்கூட்டம்
வாழ்கநற் கோமிரைகள்
தெருவாழ் தருமைத் திருஞான
சம்பந்த தேசிகனே.